<u>**In the Court of the District Munsif, Eraniel**</u>

**Original Suit No. 37/2023** **Date:05.03.2026.**

**(PW1)- மேரி ஜோஸ்பின் ராயன்**

<u>**2** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**</u>

1. எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் பிறந்த போது எஸ்.எஸ் ராயன் என்பவருக்கு திருமணம் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை நான் பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் நினைவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் எஸ்.எஸ் ராயனின் மூத்த மகளாக என்னை குடும்ப அட்டையில் குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான் குடும்ப அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது அப்பாவின் வீட்டில் உள்ளவர்கள் தரவில்லை. என்னுடைய தாயார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி எனது தாயார் கிடையாது என்றால் சரிதான்.

2. எஸ்.எஸ் ராயன் உயிருடன் இருந்த காலத்தில் அவரது வீட்டில் அருவக்கு வேண்டிய உதவிகளை நான் செய்து கொடுப்பேன் என்றால் அப்பாவிற்கான உதவிகளை செய்வேன். வா.சா.ஆ.7 ஆவணத்தில் பாதுகாவலர் என்ற முறையில் தான் எஸ்.எஸ் ராயன் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் நடந்த பின்பு நான் எனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றாலும் எப்போதாவது எனது அப்பா வீட்டிற்கு வருவேன் என்றால் சரியல்ல, அடிக்கடி வருவேன். வா.சா.ஆ.10 அழைப்பிதழில் எஸ்.எஸ் ராயன் மற்றும் இரண்டாம் பிரதிவாதியின் பெயர் என்னுடைய விருப்பத்தின் பெயரில் அச்சடிக்க பட்டது என்றால் சரியல்ல.

3. மேற்படி அழைப்பிதழ் திருவணந்தபுரத்தில் என்னால் அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான், எனது அப்பா மற்றும் அம்மாவிடம் கேட்டு அச்சடித்தேன். மேற்படி அழைப்பிதழில் 1ம் பிரதிவாதி பெயர் இல்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் 1ம் பிரதிவாதியின் பெயரும் மேற்படி அழைப்பிதழில் உள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியும் எஸ்.எஸ். ராயனும் திருமண பதிவேட்டில் கையெழுத்து போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ல் அவர்களது கையெழுத்து இல்லையென்றால் சரிதான், மேற்படி சான்றிதழில் கையெழுத்து வராது.

4. திருமண பதிவு செய்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 9 ஆவணத்தில்

எஸ்.எஸ். ராயன் மற்றும் 1ம் பிரதிவாதி கையெழுத்து போட்டுள்ளதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் மேற்படி ஆவணத்தில் அவர்களது கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் ஞானஸ்தானம் பெறும் போது எனக்கு வயது 23 என்றாலும் அப்போது எனது பெற்றோர்கள் சம்மதம் தேவையில்லை என்றால் சரியல்ல. எஸ்.எஸ் ராயன் மருத்துவமனையில் அனுமதிக்கபட்ட சமயத்தில் 1,2 பிரதிவாதிகள் தான் உடனிருந்து பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல, நான் தான் பார்த்துக்கொண்டேன். நான் மருத்துவமனைக்கு செல்லவில்லையென்றலும் 1,2 பிரதிவாதிகள் தான் ராயனை பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

5. நான் தாக்க்ல செய்துள்ள வா.சா.ஆ 1 ஆவணம் எனது கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் என்னை எஸ்.எஸ் ராயனின் மகள் என்று எனது விருப்பத்தின் பெயரில் நாங்களாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2,13 ஆவணங்கள் வழிபாதைக்கு வேண்டி எழுதப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது கணவர், ஜார்ஜ், இரணியோஸ் ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொண்ட ஆவணம் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி ஆவணங்கள் ராயன் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணங்கள் என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. 3ம் பிரதிவாதி இறந்துபோன ராயனுக்கு 1, 2 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்று சான்றிதழ் வழங்கியதற்கு நான் வருவாய் கோட்டாட்சியரிடம் நான் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவின் அடிப்படையில் விசாரணை நடைப்பெற்றது என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் மூன்று வாய்புகள் கொடுக்கப்பட்டும் நான் இறந்துபோன ராயனின் உயிரியல் மகள் என்றோ தத்து எடுத்த மகள் என்றோ காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் மூன்றாம் பிரதிவாதி வாரிசு சான்றிதழை 1ம் பிரதிவாதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இறந்துபோன ராயனின் உயிரியல் மகள் என்றோ தத்து எடுத்த மகள் என்றோ காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. மரபணு சோதனையும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4,7,9,11 ஆகிய ஆவணங்களில் எனது பெயருக்கு முன்பு T.C. என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி T.C. யாருடைய பெயரை குறிக்கிறது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பெயர் ராயனை குறிப்பிடாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு 30.12.1993 ல் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். ஒரு நபருக்கு சர்ச்சில் திருமணம் நடைபெற வேண்டும்

என்றால் ஏதவாது ஒரு சர்ச்சில் ஞானஸ்தானம் எடுத்து அவர் உறுப்பினராக இருக்க வேண்டும் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு 7 வாரத்திற்கு முன்பு 07.11.1993 அன்று புனித ஜார்ஜ் ஆலயம், பிலாவிளையில் எனக்கு ஞானஸ்தானம் எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

8. பொதுவாக சிறு வயதில் தான் ஒருவெருக்கு ஞானஸ்தானம் எடுப்பார்கள் என்றால் சிறு வயதிலும் எடுப்பார்கள் வளர்ந்த பின்பும் எடுப்பார்கள். இறந்த போன ராயன், 1, 2 பிரதிவாதிகள் படர்நிலம் என்ற இடத்தில் உள்ள புனித பயஸ் கத்தோலிக்க சபையில் உறுப்பினர்கள் என்றால் சரிதான். நான் திருமணம் முடிந்து எனது கணவர் வீட்டிற்கு சென்ற பின்பு எனது கணவரின் விலாசத்தில் திருவணந்தபுரத்தில் நான் ஆதார் அடையாள அட்டை பெற்றேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 ஆவணத்தில் எனது கணவரின் பெயர் இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் C/O ராயன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. நான் இறந்து போன எஸ்.எஸ் ராயனின் உயிரியல் மகளோ தத்தெடுத்த மகளோ கிடையாது என்றாலும் வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**